

# வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!
(சங்கீதம் 119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

வியாழன்தோறும்

| 27.11.2025 | 48. பண்டு பார்க்காத தோட்டம்போல், இருதயம் மாறிடக்கூடாது! |
|---|---|



“நம்மை நாமே தேவனுக்கு முன்பாக நிறுத்தி சோதித்தறிந்து வாழ்ந்திடும் வாழ்க்கை மிக மிக முக்கியம் நிறைந்ததாய் இருக்கிறது!!” தன்னை சோதித்து வாழாத கிறிஸ்தவனின் ஜீவியம் “பண்டு பார்க்காத தோட்டம் போலாகிவிடும்”. ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே, அவனுடைய தோட்டத்தில் ரோஜா மலர்களல்ல, தக்காளிப் பழங்கள் அல்ல...... ‘களைகள்’ மண்டி மூடிவிடும்! தன்னை சோதித்து வாழாத கிறிஸ்தவனின் ஜீவியம் “பூட்டிய வீட்டைப் போலாகிவிடும்”. உங்கள் வீட்டைப் பூட்டிவிட்டு சில வாரங்கள் கழித்து திறந்து பாருங்கள்...... எங்கிருந்துதான் இவ்வளவு தூசிகள் வந்ததோ என நீங்கள் வியந்து போவீர்கள்! தன்னை சோதித்து வாழாத கிறிஸ்தவனின் ஜீவியம் “கற்றுக் கொடுக்காத பிள்ளையைப் போலாகிவிடும்”. உங்கள் பிள்ளைக்கு போதனைகளையும், ஒழுக்கத்தையும் கற்றுத்தர அக்கறை செலுத்தாமல் அப்படியே விட்டுவையுங்கள்....... வெகு விரைவில் உங்கள் பிள்ளை காட்டு-மிராண்டி குணம் படைத்தவனாய் மாறிவிடுவான்!!

கவனம்! தேவனுக்கு முன்பாக உங்களை வைத்து, உங்களை ஆராய்ந்து சோதித்து வாழுங்கள்...... இல்லையேல், உங்கள் வாழ்வு சீரழிந்து போய்விடும்!! அந்த கதி நம் ஒருவருக்கும் ஏற்படாதிருக்க தேவன்தாமே அருள்புரிவாராக, ஆமென்.

– ரத்னம்